ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத்$_3$ வரவரமுநயே நம:

वाधूलवीरराघवार्यानुगृहीतं

वरवरमुनिसुचरितचषकम्

திருமழிசை அண்ணாவப்பங்கார் அருளிச்செய்த

வரவரமுநிஸுசரிதசஷகம்

பதிப்பாசிரியர்

ஆர்.பாலாஜி (ரகுராமன்) M.A.,M.Phil.,

(செல்:9994606427)

க்$_3$ரந்த$_2$ பரிபாலந ட்ரஸ்ட் வெளியீடு

24/71, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி–17

திருவஹீந்த்ரபுரம் மணவாளமாமுனிகள் ஸந்நிதி ஸம்ப்ரோக்ஷண வைபவத்தில் திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார்ஜீயர்ஸ்வாமி திருக்கரங்களால் வெளியிடப்படுகிறது.

श्रीमद्वरवरमुनये नमः

वाधूलवीरराघवार्यानुगृहीतं

वरवरमुनिसुचरितचषकम्

मूलर्क्षे श्रीनगर्यामुदयमधिगतो जैत्रजिह्वेशदासात्
तस्मात्तापादिपूर्वं रुचिरवर इति प्राप्तनामा गुणैः स्वैः ।
तिष्ठन् ग्रामे कडारे कतिचन शरदो मातुलावासभूते
साङ्गोपाङ्गागमज्ञो द्रमिडनिगमवित् प्राप दारानुदारान् ।। १

திருமழிசை அண்ணாவப்பங்கார் அருளிச்செய்த
வரவரமுநிஸுசரிதசஷகம்.

மூலர்க்ஷே ஸ்ரீநக$_3$ர்யாமுத$_3$யமதி$_4$க$_3$தோ ஜைத்ரஜிஹ்வேஶதா$_3$ஸாத்
தஸ்மாத் தாபாதி$_3$பூர்வம் ருசிரவர இதி ப்ராப்தநாமா கு$_3$ணை: ஸ்வை: |
திஷ்டந் க்$_3$ராமே கடா$_3$ரே கதிசந ஶரதோ$_3$ மாதுலாவாஸபூ$_4$தே
ஸாங்கோ$_3$பாங்கா$_3$க$_3$மஜ்ஞோ த்$_3$ரமிட$_3$நிக$_3$மவித் ப்ராப தா$_3$ராநுதா$_3$ராந் ||

மணவாளமாமுனிகள் ஆழ்வார்திருநக$_3$ரியில் திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான்தாதரண்ணருக்குத் திருக்குமாரராக ஐப்பசித் திருமூலத்தில் திருவவதரித்தார். தம்முடைய திருத்தகப்பனாரிடமிருந்து திருவிலச்சினை ப்ரஸாதிக்கப்பெற்று, வடிவழகினாலே ‘அழகிய மணவாளன்’ என்று திருநாமமிடப்பட்டார். பின்பு, ஒருசில ஆண்டுகள் சிக்கில்கடாரத்தில் தம் அம்மான்திருமாளிகையில் இருந்துகொண்டு அங்கோ$_3$பாங்க$_3$ங்களோடு கூடிய வேத$_3$த்தையும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் கற்று, கு$_3$ணவதியான பத்னியையும் அடைந்தார். *(1)*

भूयः श्रीरङ्गनाथे निजनिलयगते श्रीनगर्यां कडारात्
श्रीशैलार्यं श्रितस्तत्कलितयतिपतौ विंशतिं शंसति स्म ।
तद्दत्तां तत्सपर्यामनुदिनमकरोद्द्राविडाम्नायभाष्यं
षड्त्रिंशद्भिस्सहस्रैस्सुगणितमतिभिः वाग्विधेयं दधौ सः ।। २

பூ$_4$யஃ ஸ்ரீரங்க$_3$நாதே$_2$ நிஜநிலயக$_3$தே ஸ்ரீநக$_3$ர்யாம் கட$_3$ாராத்
ஸ்ரீஶைலார்யம் ஶ்ரிதஸ்தத்கலிதயதிபதௌ விம்ஶதிம் ஶம்ஸதி ஸ்ம|
தத்$_3$த$_3$த்தாம் தத்ஸபர்யாமநுதி$_3$நமகரோத்$_3$ த்$_3$ராவிட$_3$ாம்நாயப$_4$ாஷ்யம்
ஷட்த்ரிம்ஷத்$_3$பி$_4$ஸ் ஸஹஸ்ரைஸ் ஸூக$_3$ணிதமதிபி$_4$ர் வாக்$_3$விதே$_4$யம்
த$_3$தௌ$_4$ ஸஃ||(2)

நம்பெருமாள் மீண்டும் கோயிலேறவெழுந்தருளின பிறகு, அழகியமணவாளரும் சிக்கில்கடாரத்திலிருந்து ஆழ்வார்திருநக$_3$ரிக்குச் சென்று, திருவாய்மொழிப்பிள்ளை என்று ப்ரஸித்$_3$த$_4$ரான திருமலையாழ்வாரை ஆஶ்ரயித்தார். அங்கு அந்தத் திருவாய்மொழிப் பிள்ளையினுல் ப்ரதிஷ்டை$_2$செய்யப்பட்டிருந்த உடையவரைக் குறித்து 'யதிராஜவிம்ஶதி'யை அருளிச்செய்தார். திருவாய்மொழிப்பிள்ளையால் அளிக்கப்பட்ட யதிராஜகைங்கர்யத்தை தினந்தோறும் செய்துவந்தார். திருவாய்மொழிவ்யாக்$_2$யானமான ஈடுமுப்பத்தாராயிரத்தை கூர்மையான பு$_3$த்$_3$தி$_4$யுள்ள ஸப்$_3$ரஹ்மசாரிகளுடனே கேட்டு, வாசோவிதே$_4$யமாயாக்கிக்கொண்டார். *(2)*

श्रीशैलेशाय कृत्वा स शपथमखिलद्रामिडाम्नायभाष्य-
व्याख्यादीक्षां ततोऽस्मिन् श्रितवति परमंधाम तत्किंक्रियाद्यः।
तत्सूक्त्या रङ्गनाथप्रणमनकुतुकी भट्टनाथेन गोदां
नत्वोद्यानाद्रिनाथं तदनु वरवरो रङ्गराजं ददर्श ॥ ३

ஸ்ரீஶைலேஶாய க்ருத்வா ஸ ஶபத$_2$மகி$_2$லத்$_3$ராமிட$_3$ாம்நாயப$_4$ாஷ்ய
வ்யாக்$_2$யாதீ$_3$க்ஷாம் ததோऽஸ்மிந் ஶ்ரிதவதி பரமம் த$_4$ாம
தத்கிம்க்ரியாட்$_4$யஃ|
தத்ஸூக்த்யா ரங்க$_3$நாத$_2$ப்ரணமநகுதுகீ ப$_4$ட்டநாதே$_2$ந கோ$_3$த$_3$ாம்
நத்வோத்$_3$யாநாத்$_3$ரிநாத$_2$ம் தத$_3$நு வரவரோ ரங்க$_3$ராஜம் த$_3$த$_3$ர்ஶ|| (3)

அந்த அழகியமணவாளநாயனுர் திருமலையாழ்வாரின் அந்திம த$_3$ஶையில், 'ஆழ்வார்களுடைய தமிழ்வேத$_3$ங்களை தத்$_3$வ்யாக்$_2$யாநங்களோடு கூடக் காலக்ஷேபம் செய்து கொண்டிருப்பேன்' என்று ஶபத$_2$ம் செய்து, பின்பு அவர் திருநாடலங்கரித்தபோது அவருக்குச் செய்யவேண்டிய சரமகைங்கர்யங்களைச் செய்தார். அவரது வாக்குப்படி பெரியபெருமாளைத் திருவடிதொழவேண்டுமென்ற ஆவலுடன், திருநக$_3$ரியிலிருந்து புறப்பட்டு, வழியில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரையும், ஆண்டாளையும் மங்க$_3$ளாஶாஸநம் செய்து, திருமாலிருஞ்சோலை அழகரையும் வணங்கிவிட்டு, திருவரங்கத்தையடைந்து பெரியபெருமாளைக் கண்டுகளித்தார். *(3)*

तेनास्मिन्नित्यवासं प्रति नियमितहृल्लोकगुर्वादिचर्यां
तत्सूक्तिं तद्गृहांश्च स्वमनसि कलयन् रङ्गकैङ्कर्यमाप्तः ।
गत्वाऽसौ वेङ्कटाद्रिं तदनु करिगिरिं भूतपुर्यां यतीन्द्रं
नत्वा गत्वाऽथ काञ्चीं वरदगुरुवरादत्रिजाद् भाष्यमाप ।। ४

தேநாஸ்மிந்நித்யவாஸம் ப்ரதி நியமிதஹ்ருல்லோககு$_3$ர்வாதி$_3$சர்யாம்
தத்ஸூக்திம் தத்$_3$க்$_3$ருஹாம்ஶ்ச ஸ்வமநஸி கலயந்
ரங்க$_3$கைங்க$_3$ர்யமாப்தஃ|
க$_3$த்வா஽ஸௌ வேங்கடாத்$_3$ரிம் தத$_3$நு கரிகி$_3$ரிம் பூ$_4$தபுர்யாம் யதீந்த்$_3$ரம்
நத்வா க$_3$த்வா஽த$_2$ காஞ்சீம் வரத$_3$கு$_3$ருவராத$_3$த்ரிஜாத்$_3$ ப$_4$ாஷ்யமாப|| (4)

அந்த பெரியபெருமாளுடைய த$_3$ர்ஶநத்தால் ஸ்ரீரங்க$_3$த்தில் நித்யவாஸம் பண்ணவேண்டுமென்று கட்டுண்ட மனத்தையுடைய ராஞர். பிள்ளைலோகாசார்யர் முதலான ஆசார்யர்களின் சரித்ரங்களைக் கேட்டு, அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளை மனத்தில் அநுஸந்தி$_4$த்து, அவர்களுடைய திருமாளிகைகளை ஸேவித்து, திருவரங்கநாத$_2$னின் கைங்கர்யத்தைப் பெற்றார். பின்பு, (தி$_3$வ்யதே$_3$ஶங்களை மங்க$_3$ளா ஶாஸநம் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி) திருவேங்கடமலைக்கும், அத்திகி$_3$ரிக்கும் சென்று, பின்னர் ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானாரைத் திருவடிதொழுது, பிறகு திருவெஃகாவையடைந்து கிடாம்பிதிருமலை நாயனார் என்கிற ஆத்ரேயவரத$_3$ாசார்யர் ஸந்நிதி$_4$யில் ஸ்ரீப$_4$ாஷ்யத்தை அதி$_4$கரித்தார்.

श्रीरङ्गं प्राप्य तस्मिन्नियतवसतिकृन्मङ्गलान्यस्य वाञ्छन्
आशौचार्तस्सुतेनोज्झहदथ गृहिणीं तुर्यमापाश्रमं सः ।
तत्र श्रीशैलनाथाह्वयपरिमलितं मण्डपं कारयित्वा
लोकाचार्यादिसूक्तिं व्यवृणुत निपुणं रम्यजामातृयोगी ।। ५

ஸ்ரீரங்க$_3$ம் ப்ராப்ய தஸ்மிந்நியதவஸதிக்ருந்மங்க$_3$ளாந்யஸ்ய வாஞ்ச$_2$ந்
ஆஶௌசார்த்தஸ் ஸுதேநோஜ்ஜஹத$_3$த $_2$க்$_3$ருஹிணீம் துர்யமாபாஶ்ரமம்
ஸஃ|
தத்ர ஸ்ரீஶைலநாத$_2$ாஹ்வயபரிமலிதம் மண்ட$_3$பம் காரயித்வா
லோகாசார்யாதி$_3$ ஸூக்திம் வ்யவ்ருணுத நிபுணம் ரம்யஜாமாத்ருயோகீ$_3$ ||5

மீண்டும் திருவரங்கத்தையடைந்து, அங்கே நியதமாக வஸிப்பதற்கு ஸ்த$_2$ாநத்தை ஏற்படுத்திக்கொண்டு, எம்பெருமானுக்குத் தடையின்றி மங்க$_3$ளாஶாஸநம் செய்ய விரும்பியவராய் எழுந்தருளி

யிருந்தார். அச்சமயத்தில், அதற்கு இடையூருன ஆபௌளசத்தைச் சிலர் தெரிவிக்க, அதனுல் போரக்லேஶித்து, பத்னியையும், குமாரரையும் த்யஜித்து ஸந்யாஸாஶ்ரமத்தை ஸ்வீகரித்தார். பெரியபெருமாளி டமிருந்து 'அழகியமணவாள ஜீயர்' என்ற திருநாமத்தைப்பெற்று, அங்கு ஸ்வாசார்யரான திருமலையாழ்வாரின் திருநாமத்தால் ஒரு வ்யாக்$_2$யாநமண்ட$_3$பத்தை ஏற்படுத்தி, அவ்விடத்தேயிருந்துகொண்டு பிள்ளைலோகாசார்யர் முதலிய பூர்வர்களுடைய ஸ்ரீஸூக்திகளை நன்ருக விவரித்துக் கொண்டெழுந்தருளியிருந்தார்.

तत्रार्चां रङ्गराजं तदुदितनियमात् प्राप्य भूयोभिरार्यैः
वाधूलाद्यैः श्रिताङ्घ्रिः कमपि तु कुदृशं दाशरथ्यार्यवर्यात् ।
जित्वा तस्मिन् वधूले सहवरदगुरुः स्वार्च्यरङ्गाधिराजं
दत्त्वा वाधूलवंशे समधिककरुणां सर्वलोके विवव्रे ॥ ६

தத்ரார்ச்சாம் ரங்க$_3$ராஜம் தது$_3$தி$_3$த நியமாத் ப்ராப்ய பூ$_4$யோபி$_4$ரார்யைஃ
வாதூ$_4$லாத்$_3$யைஃ ஶ்ரிதாங்க்$_3$ரிஃ கமபி து குத்$_3$ருஶம் த$_3$ாஶரத்$_2$யார்யவர்யாத் |
ஜித்வா தஸ்மிந் வதூ$_4$லே ஸஹவரத$_3$கு$_3$ருஃ ஸ்வார்ச்யரங்க$_3$ாதி$_4$ராஜம்
த$_3$த்வா வாதூ$_4$லவம்ஶே ஸமதி$_4$ககருணாம் ஸர்வலோகே விவவ்ரே|| 6

பின்பு பெரியஜீயர் பெரியபெருமாளுடைய நியமநத்தாலே ஸ்ரீரங்க$_3$ராஜரைத் தமக்குத் திருவாராத$_4$னமாகப் பெற்ருர். பின்னர் கோயிலண்ணன் முதலான அநேக கந்தாடை அய்யங்கார்களும் மாமுனிகளின் திருவடிகளை ஆஶ்ரயித்தனர். பின்பொரு ஸமயம் ஒரு ஏகத$_3$ண்டி$_3$ ஸந்யாஸி பெரியஜீயரைத் தன்னுடன் வாத$_3$த்திற்கு அழைக்க, அவனை வேடலப்பையின் ஶிஷ்யரான த$_3$ாஶரதி$_2$யாச்சான் மூலமாக ஜயித்தார். பின்பு கோயிலண்ணனும் த$_3$ாஶரதி$_2$யாச்சானை மடத்துக்கழைத்துக் கொண்டுவர, ஜீயரும் ப்ரீதியுடன் தன்னுடைய திருவாராத$_4$னத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீரங்க$_3$ராஜரை அவருக்கு ப்ரஸாதி$_3$த்து வாதூ$_4$ல வம்ஶத்தில் தனக்குள்ள அதி$_4$கமான கருணையை அனைத்துலகத்திற்கும் வெளிப்படுத்தினர்.

वात्स्ये देवाधिराजे वरदगुरुवरैस्साकमागत्य दृष्ट्वा
स्मेरस्वान्तेऽपि भाग्यव्यतिकरविरहात् क्षेममप्राप्य याते ।
स्वार्च्य श्रीजानकीशप्रबलनियमनेनाभिमुख्यादुपेते
स्फीतैः स्वैर्दृष्टिपातैर्घनतरकरुणासारवर्षं ववर्ष ॥ ७

வாத்ஸ்யே தே$_3$வாதி$_4$ராஜே வரத$_3$கு$_3$ருவரைஸ்ஸாகமாக$_3$த்ய த்$_3$ருஷ்ட்வா
ஸ்மேரஸ்வாந்தோऽபி ப$_4$ாக்$_3$யவ்யதிகரவிரஹாத் க்ஷேமமப்ராப்ய யாதோ|
ஸ்வார்ச்யஸ்ரீஜாநகீஶப்ரப$_3$லநியமநேநாபி$_4$முக்$_2$யாது$_3$பேதே
ஸ்பீ$_2$தைः ஸ்வைர்த்$_3$ருஷ்டிபாதைர் க$_4$நதரகருணாஸாரவர்ஷம் வவர்ஷ||(7)

ஸ்ரீவத்ஸகோ$_3$த்ரத்திலுதி$_3$த்த தே$_3$வராஜரென்கிற எறும்பியப்பா (திருவரங்கத்திற்கு வந்து, ஆப்தப$_3$ந்து$_4$வான) கந்தாடையண்ணனோடு கூட ஜீயர்மட$_2$த்துக்கு எழுந்தருளி, மணவாளமாமுனிகளை ஸேவித்து, திருவாய்மொழியில் ஓரிடத்திற்கு ஜீயர் ஸாதித்த அர்த்த$_2$விஶேஷங்களைக் கேட்டுப் போரப்ரீதரானார். ஆனாலும் விதி$_4$கூடாமையாலே ஜீயர்மட$_2$த்தில் அமுதுசெய்யாமலும், ஜீயருடைய திருவடிகளில் ஆஶ்ரயிக்காமலும், தமது ஊருக்கு மீண்டெழுந்தருளினார். அவருடைய திருவாராத$_4$ன எம்பெருமானான சக்ரவர்த்தித்திருமகன் அவரது கனவில் 'நீர் ஶேஷாவதாரமான ஜீயர்திருவடிகளில் அபசாரப்பட்டு வந்தீர்; ஜீயர் திருவடிகளிலே ஆஶ்ரயித்து அபராத$_4$க்ஷாமணம் பண்ணிக்கொண்டு வந்தாலொழிய உம்முடைய கையாலே திருவாராத$_4$னம் கொள்ள மாட்டோம். நீர் கடுகப்போகீர்' என்று எறும்பியப்பாவை நியமித்தருள, அவரும் உடனே புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி, அத்யாத$_3$ரத்து டனே ஜீயரை தண்டனிட, ஜீயரும் தமது மலர்ந்த திருக்கண்களாலே குளிரக்கடாக்ஷித்து அப்பாவிடம் மிகுந்த கருணைமழையைப் பொழிந்தார்.(7)

बध्वेमां सप्तगोत्रीं प्रतिवदभयकृद्वर्यगोविन्दवर्यौ
वात्स्यं श्रीदेवराजं यमिनमपि महावानशैलाधिवासम् ।
आर्यानन्यांश्च कृत्वा वसुदिगिभवरान् पञ्चरत्नीं च कृत्वा
पौत्रौ स्वौ रम्यजामातरमधिकगुणं भट्टनाथं ररक्ष ।। ८

ப$_3$த்$_4$வேமாம் ஸப்தகோ$_3$த்ரீம் ப்ரதிவத$_3$ப$_4$யக்ருத்$_3$வர்ய கோ$_3$விந்த$_3$வர்யௌ
வாத்ஸ்யம் ஸ்ரீதே$_3$வராஜம் யமிநமபி மஹாவாநஶைலாதி$_4$வாஸம்|
ஆர்யாநந்யாம்ஶ்ச க்ருத்வா வஸூதி$_3$கி$_3$ப$_4$வராந் பஞ்சரத்நீம் ச க்ருத்வா
பௌத்ரௌ ஸ்வௌ ரம்யஜாமாதரமதி$_4$ககு$_3$ணம் ப$_4$ட்டநாத$_2$ம் ரரக்ஷ||8

எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதி$_4$பதிகளிலே பரிக$_3$ணிதரான முதலியாண்டான், முடும்பைநம்பி, முடும்பையம்மாள், ஆஸூரிப் பெருமாள், கிடாம்பிப்பெருமாள், குமாண்டூர் இளையவில்லியாச்சான், வங்கிபுரத்துநம்பி ஆகிய ஏழுகோ$_3$த்ரத்தாரும் தங்களுக்குள்ளேயே ஸம்ப$_3$ந்த$_4$ம் பண்ணிக்கொள்ளவேண்டும் என்று நியமனம் செய்து ஸப்தகோ$_3$த்ரவ்யவஸ்தை$_2$யை ஏற்படுத்தினார் பெரியஜீயர். ப்ரதிவாதி$_3$

ப$_4$யங்கரம்அண்ணன், பூர்வாஶ்ரமத்தில் கே$_3$ாவிந்த$_3$த$_3$ாஸரென்கிற திருநாமமுடையவரான பரவஸ்துப$_4$ட்டர்பிரான் ஜீயர், எறும்பியப்பா, வானமாமலைஜீயர், கோயில் கந்தாடைஅண்ணன், திருவேங்கட ராமாநுஜஜீயர், அப்பிள்ளார், அப்பிள்ளை ஆகிய எண்மரையும் அஷ்டதி$_3$க்$_3$க$_3$ஜங்களாக நியமித்து, பஞ்சரத்நங்களையும் நியமித்தார். நற்குணங்கள் நிறைந்த தமது பௌத்ரர்களான அழகியமணவாள நாயனாரையும் (ஜீயர்நாயனாரையும்), பெரியாழ்வார்ஐயனையும் நன்கு ரக்ஷித்தார். *(8)*

देवं भूयो दिदृक्षुश्शठमथनमसौ श्रीनगर्यां गतस्तं
नत्वा स्तुत्वा प्रहृष्टो विभुनवनिलयीं वर्धयित्वाऽऽर्यचेतः।
जिज्ञासुर्यादवाद्रेरधिसरणि जनन्यार्यदर्शी निवृत्तः
प्राप्तार्थस्तुष्टचेताश्छदनिजनिलये वह्निदानन्वगृह्णात् ।। ९

தே$_3$வம் பூ$_4$யோ தி$_3$த்$_3$ருக்ஷுஶ்ஶட$_2$மத$_2$நமஸௌ ஶ்ரீநக$_3$ர்யாம் க$_3$தஸ்தம்
நத்வா ஸ்துத்வா ப்ரஹ்ருஷ்டோ விபு$_4$நவநிலயீம் வர்த்த$_4$யித்வாऽऽர்யசேதஃ।
ஜிஜ்ஞாஸுர்யாத$_3$வாத்$_3$ரேரதி$_4$ஸரணி ஜநந்யார்யத$_3$ர்ஶீ நிவ்ருத்தஃ
ப்ராப்தார்த்த$_2$ஸ் துஷ்டசேதாஶ்ச$_2$த$_3$நிஜநிலயே வஹ்நித$_3$ாநந்வ
க்$_3$ருஹ்ணாத்।। *(9)*

மீண்டும் ஶட$_2$கோபரான நம்மாழ்வாரை ஸேவிக்கவிரும்பி, ஆழ்வார்திருநக$_3$ரிக்குச் சென்று, அவரைத் துதித்தேத்தித் திருவடி தொழுது இன்புற்றவராய், நவதிருப்பதி எம்பெருமான்களை மங்க$_3$ளாஶாஸநம் செய்தார். திருநாராயணபுரத்தாய் என்ற ஜநந்யாசார்யரிடமிருந்து ஆசார்யஹ்ருத$_3$யத்தின் பொருளை அறியவேண்டுமென்ற விருப்பத்தினால் திருநாராயணபுரத்துக் குப் புறப்பட்டார். வழியில் சிறிது தொலைவிலேயே ஜநந்யாசார்யரைக் கண்டு, அவருடனே திருநக$_3$ரிக்கு மீண்டெழுந்தருளி ஆசார்யஹ்ருத$_3$ய ரஹஸ்யார்த்த$_2$ங்களைக் கேட்டறிந்தார். பின்பு கூரைவேய்ந்த தம்மட$_2$த்திற்குத் தீவைத்தவர்களை, அந்த தே$_3$ஶத்து அரசன் தண்டிக்க முற்பட்டபோது அதனைத் தடுத்து அவர்களைக் காத்தருளினார். *(9)*

कृत्वाऽसौ श्रीनगर्यां शठमथनमुदे मण्डपं कालमेघं
वीथीस्सीमाश्च कृत्वा रुचिरवरमहामण्डपं कल्पयित्वा।
विप्रं श्रीह्रस्वकुट्यां निजचरणजुषं तत्र कैङ्कर्यकार्ये
निष्प्राप्यासाद्य हृष्टः पुनरपि कुरुकामागमद्रङ्गधाम ।। १०

க்ருத்வாSஸெள ஶ்ரீநக3ர்யாம் ஶட2மத2நமுதே3 மண்ட3பம் காலமேக4ம்
வீதீ2ஸ்ஸீமாஶ்ச க்ருத்வா ருசிரவரமஹாமண்ட3பம் கல்பயித்வா|
விப்ரம் ஶ்ரீஹ்ரஸ்வகுட்யாம் நிஜசரணஜுஷம் தத்ர கைங்கர்யகார்யே
நிஷ்ப்ராப்யாஸாத்3ய ஹ்ருஷ்டஃ புநரபி குருகாமாக3மத்3 ரங்க3தா4ம||10

பெரியஜீயர், நம்மாழ்வார் திருவுள்ளமுகக்கும்படி திருநக3ரியில் காளமேக4ன்திருமண்ட3பத்தையும், திருவீதி2களையும், எல்லைகளையும் ஏற்படுத்தி, அழகியமணவாளன்திருமண்ட3பத்தையும் உண்டாக்கினர். தம் திருவடிகளை ஆஶ்ரயித்த திருவேங்கடமுடையான் என்ற ப்3ராஹ்மணனைத் திருக்குறுங்குடிக்கோயில்கைங்கர்யத்திலே நியமித்து, மீண்டும் திருநக3ரியேற எழுந்தருளி, ஆழ்வாருக்கு அனைத்தழகும் கண்டருளப்பண்ணி மகிழ்ந்து, பின்பு திருவரங்கத்திற்கு எழுந்தருளினர்.*(10)*

तत्र श्रीतालवृन्तव्यजनपरिकरेणोत्तमं सेवमानं
स्वप्ने श्रीरङ्गभर्त्रा स्वयमनुकथितस्वाहिराजावतार : ।
मध्याह्ने काञ्च वृद्धां प्रति रहसि परं स्वाहिराजत्ववेत्रीं
स्वं भावं निह्नुवान: फणिपतिशयनं प्रत्यहं सेवते स्म ।। ११

தத்ர ஶ்ரீதாலவ்ருந்தவ்யஜநபரிகரேணோத்தமம் ஸேவமாநம்
ஸ்வப்நே ஶ்ரீரங்க3ப4ர்த்ரா ஸ்வயமநுகதி2தஸ்வாஹிராஜாவதாரஃ|
மத்4யாஹ்நே காஞ்ச வ்ருத்3தா4ம் ப்ரதி ரஹஸி பரம் ஸ்வாஹிராஜத்வவேத்ரீம்
ஸ்வம் பா4வம் நிஹ்நுவாநஃ ப2ணிபதிஶயநம் ப்ரத்யஹம் ஸேவதே ஸ்ம||(11)

ஒருநாள் திருவாலவட்டகைங்கர்யம் செய்துகொண்டிருந்த உத்தமநம்பி (பெரியஜீயருடைய பாலின்வண்ணமான திருமேனிநிறத்தை வேறுவித4மாக நினைத்து 'நெடும்போதிருக்கவேண்டா' என்று கூறி அபசாரப்பட, ஜீயரும் மட2த்திற்கு எழுந்தருளினர். உத்தமநம்பியும்) தூங்கிப் பலகணிக்கதவிலே சாய்ந்திருக்க, பெரியபெருமாள் அவர் கனவிலே தோன்றி, திருவநந்தாழ்வானைத் தொட்டுக்காட்டி 'இவர்காணும் மாமுனிகளாக அவதரித்துள்ளார்' என்று கூறினர். (உத்தமநம்பியும் கண்விழித்து, அப்போதே மட2த்திற்கு வந்து ஜீயர்திருவடிகளில் விழுந்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டார்.) பின்பொருநாள் மத்4யாஹ்நம் ஶட2கோபகொற்றி என்கிற மூதாட்டி திருமலையாழ்வார் என்ற வ்யாக்2யாநமண்ட3பத்தில் ஏகாந்தமாக எழுந்தருளியிருந்த ஜீயரைக் கதவுப்புரையிலே ஆதி3ஶேஷனுகக் கண்டதை ஒருவர்க்கும் வெளியிடாமல் மறைக்கும்படி நியமித்தார் ஜீயர். ப்ரதிதி3னமும் அரவினணைமிசை மேயமாயனுரான பெரியபெருமாளை மங்க3ளாஶாஸநம் செய்துகொண்டெழுந்தருளியிருந்தார்.*(11)*

एवंभूतं मुनीन्द्रं धरणिजलधिजानायको रङ्गनाथः
स्वस्मै भाष्यं श्रुतीनां वकुलधरमुनेर्वक्तुमाज्ञापयत्तम् ।
सोऽयं संवत्सरेण द्रमिडमयसुधां रङ्गनाथाय वर्षन्
श्रीशैलेत्यादिपद्यप्रवचनमुखतस्तेन संपूजितोऽभूत् ।। १२

ஏவம்பூ$_4$தம் முநீந்த்$_3$ரம் த$_4$ரணிஜலதி$_4$ஜாநாயகோ ரங்க$_3$நாத$_2$ꞏ
ஸ்வஸ்மை ப$_4$ாஷ்யம் ஶ்ருதீநாம் வகுலத$_4$ரமுநேர் வக்துமாஜ்ஞாபயத்தம்।
ஸோऽயம் ஸம்வத்ஸரேண த்$_3$ரமிட$_3$மயஸுத$_4$ாம் ரங்க$_3$நாத$_2$ாய வர்ஷந்
ஶ்ரீஶைலேத்யாதி$_3$பத்$_3$யப்ரவசநமுக$_2$தஸ்தேந ஸம்பூஜிதோऽபூ$_4$த்।।(12)

இப்படியிருக்கிற பெரியஜீயரை ஒருநாள் ஸ்ரீபூ$_4$நாயகரான நம்பெருமாள், மகிழ்மாலைமார்பினரான நம்மாழ்வாரருளிச்செய்த தமிழ் வேத$_3$மான திருவாய்மொழியின் வ்யாக்$_2$யானங்களைச் சொல்லும்படி நியமித்தார். அவரும் ஒரு ஸம்வத்ஸரகாலம் தொண்டர்க்கமுதான திருவாய்மொழியின் ஈடுமுதலான வ்யாக்$_2$யாநங்களை நம்பெருமாள் திருமுன்பே அருளிச்செய்தார். சாற்றுமுறையன்று நம்பெருமாள் ‘அரங்கநாயகம்’ என்கிற ஐந்துவயதுள்ள அர்ச்சககுமாரனாக வந்து ‘ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம்’ என்று தொடங்கும் தனியனை அருளிச்செய்து ஆசார்யரான ஜீயரை உரியமுறையில் ஸம்மானித்தார். (12)

लोकाचार्योक्ततत्त्वत्रितयमनुयुगश्लोकवाग्भूषटीका-
माला संक्षेपगीताहृदयविवरणे ज्ञानसारादिटीके ।
अन्तादिं रत्नमालां शठरिपुफणितिव्याक्रियामानगोलं
चक्रे कौचिद्विवैरावकलयत निहीनात्मपृच्छापदेशात् ।। १३

லோகாசார்யோக்ததத்த்வத்ரிதயமநுயுக$_3$ஶ்லோகவாக்$_3$பூ$_4$ஷடீகா-
மாலா ஸம்க்ஷேபகீ$_3$தாஹ்ருத$_3$யவிவரணே ஜ்ஞாநஸாராதி$_3$டீகே।
அந்தாதி$_3$ம் ரத்நமாலாம் ஶட$_2$ரிபுப$_2$ணிதிவ்யாக்ரியாமாநகோ$_3$லம்
சக்ரே கௌசித்$_3$விவைராவகலயத நிஹீநாத்மப்ருச்ச$_2$ாபதே$_3$ஶாத்।।(13)

பெரியஜீயரும் பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த தத்த்வத்ரயம், ரஹஸ்யத்ரயார்த்த$_2$ப்ரதிபாத$_3$கமான முமுக்ஷுப்படி, ஸ்ரீவசநபூ$_4$ஷணம் இவைகளுக்கு வ்யாக்$_2$யானங்களையும், கீ$_3$தைக்கு ஸங்க்ஷிப்தமானதொரு விவரணத்தையும், ஞானஸாரம் மற்றும் ப்ரமேயஸாரத்திற்கு வ்யாக்$_2$யானங்களையும், திருவாய்மொழிநூற்றந்தாதி, உபதேசரத்தினமாலை, ஈடுமுப்பத்தாறுயிரப்படிக்கு ப்ரமாணத்திரட்டு ஆகியவற்றையும் அருளிச்செய்தார்.

‘நீங்களும் ஸ்ரீவசநபூ$_4$ஷணுதி$_4$காரிகளோ அஹங்காரம் மேலிட்டுச் சண்டையிடுவதற்கு’ என்று தெருவில் சண்டையிடும் நாய்களைக் கேட்கும் வ்யாஜத்தால் விவாத$_3$ம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் இருவரைத் தம்முள் விரோத$_4$ப$_4$ாவம் அற்றவர்களாகச்செய்தார் ஜீயர். *(13)*

दत्त्वा क्षेत्रं मठीयं भृतकभुजिमिषाद्रङ्गभर्त्रे निशीथे
वृद्धां कांचिद्विवास्य स्थविरतरुरुहन्यायतोऽलर्कहेतोः ।
*पत्नीं वृद्धां च हित्वा पुनरपि कृपया वैष्णवागोविमुक्ताम्
अङ्गीकुर्वन्नसाह्यागतवरदहरिं स्वीचकारातिकृच्छ्रात् ।। १४

த$_3$த்த்வா க்ஷேத்ரம் மடீ$_2$யம் ப்$_4$ருதகபு$_4$ஜிமிஷாத்$_3$ரங்க$_3$ப$_4$ர்த்ரே நிஶீதே$_2$
வ்ருத்$_3$த$_4$ாம் காஞ்சித்$_3$ விவாஸ்ய ஸ்த$_2$விரதருருஹந்யாயதோऽலர்க்க
ஹேதோ: ।
*பத்நீம் வ்ருத்$_3$த$_4$ாம் ச ஹித்வா புநரபி க்ருபயா வைஷ்ணவா–
கே$_3$ாவிமுக்தாம்
அங்கீ$_3$குர்வந்நஸாஹ்யாக$_3$தவரத$_3$ஹரிம் ஸ்வீசகாராதிக்ருச்ச்$_2$ராத் ॥ *(14)*

ஒருஸமயம் மட$_2$த்திற்குச் சொந்தமான விளைநிலத்துக் கூலியாட்கள் மட$_2$த்திற்குச் சொந்தமானவிடத்தில் உண்டு சென்றதையறிந்து உடனே அந்நிலத்தை பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார். ஒருநாள் வயதான மூதாட்டி ஒருத்தி, இரவு மட$_2$த்திலே ஶயநிக்க(படுக்க) முற்பட, ‘கிழட்டணிலாகிலும் மரமேறவல்லதொன்றன்றோ, உகவாதார் அபவாதம் சொல்ல இது போதுமே’ என்றுகூறி, அவ்வம்மையாரை வெளியேற்றினர்.

தளிகைக்காக கறியமுது திருத்தித்தரும் அம்மையார், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பரிவோடு ஸமர்ப்பித்த தூதுளங்கீரையை உதாஸீனப் படுத்தியதறிந்து, அவ்வம்மையாரை கைங்கர்யத்திலிருந்து விலக்கி, பின்னர் ப$_4$ாக$_3$வதாவமானம் பண்ணின பாபத்திற்கு மன்னிப்புக் கேட்கச் செய்து, க்ருபையுடன் ஏற்றுக் கொண்டார். ஜீயரை ஆஶ்ரயிக்கத் தனியே வந்த வரம்தரும்பெருமாள் பிள்ளையை (வரத$_3$ஹரியை), ‘ஸ்ரீவைஷ்ணவர் களை முன்னிடாது தனித்து வருவதே’ என்று வெறுத்து, ஆறுமாஸம் புறத்திண்ணையிலே யிருக்கச்செய்து, பின்பு அங்கீ$_3$கரித்தருளினர். *(14)*

सत्त्वस्थो दिव्यरुपं व्रतिवरमहितं प्राप्य सन्देशकर्ता
भट्टार्याय स्वशिष्यान् विनयभरितयन् दोषदृष्टिं विधूय ।
पूर्वानुष्ठाननिष्ठः पुनरपि वृषभाद्रीशमुख्यान् दिदृक्षुः
साकं श्रीवादिभीकृद्गुरुमुखविनतैरास्थयाऽसौ प्रतस्थे ।। १५

*இங்கு பத்நீம் என்றபத$_3$ம் அநந்விதமாய் காணப்படுகிறது. ஶுத்$_3$த$_4$பாட$_2$ம் இருப்பின் தெரிவிக்கவும்.

ஸத்த்வஸ்தே$_2$ா தி$_3$வ்யரூபம் வ்ரதிவரமஹிதம் ப்ராப்ய ஸந்தே$_3$ஶகர்த்தா
ப$_4$ட்டார்யாய ஸ்வஶிஷ்யாந் விநயப$_4$ரிதயந் தே$_3$ாஷத்$_3$ருஷ்டிம் விதூ$_4$ய।
பூர்வாநுஷ்ட$_2$ாநநிஷ்ட$_2$: புநரபி வ்ருஷப$_4$ாத்$_3$ரீஶமுக்$_2$யாந் தி$_3$த்$_3$ருக்ஷு:
ஸாகம் ஸ்ரீவாதி$_3$பீ$_4$க்ருத்$_3$கு$_3$ருமுக$_2$விநதைராஸ்த$_2$யாऽஸௌ ப்ரதஸ்தே$_2$॥ (15)

ஸத்த்வகு$_3$ணத்தில் நிலைநிற்பவராய், வானமாமலைஜீயர் முதலான யதிகளால் ஆஶ்ரயிக்கப்பட்டவரான மாமுனிகள் நல்வார்த்தை கேட்டனுப்பிய வடநாட்டரசனொருவனுக்கு ப$_4$ாக$_3$வதஶேஷத்வமே பரமார்த்த$_2$மென்று எழுதியனுப்பினர்.

அக்காலத்தில் கோயில் ப$_4$ட்டரொருவர் ஜீயரிடம் ‘உம்முடைய ஶிஷ்யர்கள் நம்மை வணங்காமல் அவமானப்படுத்துகிறார்கள்’ என்று கூற, ஜீயரும் விசாரித்தவளவில் ஶிஷ்யர்கள் அவருடைய தே$_3$ாஷங்களைச் சொல்லி ‘எங்களுக்கு அவரை அநுவர்த்திக்க விருப்பமில்லை’ என்ன, ‘அவரைப் பெருமாளாக நினைத்துப் பணிவுடன் ஸேவித்துப் போங்கோள்’ என்று தே$_3$ாஷமுள்ளவிடத்திலும் கு$_3$ணப்ரதிபத்தி நடக்கும்படி செய்தார்.

பூருவர்களின் அநுஷ்ட$_2$ானத்தில் நிலைநிற்பவரான பெரியஜீயர் மீண்டும் திருவேங்கடம் முதலான தி$_3$வ்யதே$_3$ஶத்து எம்பெருமான்களைச் ஸேவிக்க ஆசைப்பட்டு ப்ரதிவாதி$_3$ப$_4$யங்கரம் அண்ணன் முதலான பணிவுள்ள முதலிகளுடன் புறப்பட்டார். *(15)*

नाथं स्तम्बेरमाद्रेस्तदनु सगरुतामीश्वरां सावतंसं
स्तुत्वा नत्वाऽथ तस्मिन् कतिपयदिवसान् देवराजादियुक्तः ।
नत्वा गृध्रह्रदेशं तदनु च घटिकाद्रीश्वरं देवराज-
ग्रामं श्रीरङ्गयित्वा विमलमथ सरस्सह्यजां स ह्यकार्षीत् ॥ १६

நாத$_2$ம் ஸ்தம்பே$_3$ரமாத்$_3$ரேஸ்தத$_3$நுஸக$_3$ருதாமீஶ்வராம்ஸாவதம்ஸம்
ஸ்துத்வா நத்வாऽத$_2$ தஸ்மிந் கதிபயதி$_3$வஸாந் தே$_3$வராஜாதி$_3$யுக்த: ।
நத்வா க்$_3$ருத்$_4$ரஹ்ரதே$_3$ஶம் தத$_3$நு ச க$_4$டிகாத்$_3$ரீஶ்வரம் தே$_3$வராஜ–
க்$_3$ராமம் ஸ்ரீரங்க$_3$யித்வா விமலமத$_2$ ஸரஸ்ஸஹ்யஜாம் ஸ ஹ்யகார்ஷீத்॥ (16)

அத்திகி$_3$ரிநாத$_2$னை பேரருளாளனை ஸேவித்து, வைகாசித்திருநாளில் பக்ஷிராஜரான பெரியதிருவடிநாயனார் மீது ஆப$_4$ரணம் போல் திகழும் அவனைப்பணிந்தேத்தி, அங்கேயே சிலநாட்கள் எழுந்தருளியிருந்தார். பின்பு திருநாள் ஸேவிக்க வந்த எறும்பியப்பாவோடு புறப்பட்டு திருப்புட்குழி எம்போரேற்றையும், கடிகைத்தடங்குன்றில் அக்காரக்கனியையும் மங்க$_3$ளாஶாஸநம் செய்தருளி, எறும்பியை அடைந்து,

அவ்வூருக்கு 'வடதிருவரங்கம்' என்று திருநாமமிட்டு, அங்குள்ள குளத்திற்கு 'திருக்காவிரி' என்று பெயரிட்டருளினர். *(16)*

दृष्ट्वा श्रीवेङ्कटाद्रिं तदनु स निकटे तस्य गोविन्दराजं
योगीन्द्रस्थापितं श्रीशठमथनमुखान् संयमीन्द्रांश्च नत्वा ।
आरुह्याद्रिं तदीशं यतिपतिसहितं श्रीनिधिं शङ्खचक्रो-
दञ्चद्बाहुं शठारिप्रमुखसुवचनैस्तुष्टुवे हृष्टचेता:।। १७

த்3ருஷ்ட்வா ஸ்ரீவேங்கடாத்3ரிம் தத3நு ஸ நிகடே தஸ்ய கோ3விந்த3ராஜம்
யோகீ3ந்த்3ரஸ்தா2பிதம் ஸ்ரீஶட2மத2நமுக2ாந் ஸம்யமீந்த்3ராம்ஶ்ச நத்வா ।
ஆருஹ்யாத்3ரிம் ததீ3ஶம் யதிபதிஸஹிதம் ஸ்ரீநிதி4ம் ஶங்கசக்ரோ–
த3ஞ்சத்3பா3ஹும் ஶட2ாரிப்ரமுக2ஸுவசநைஸ் துஷ்டுவே ஹ்ருஷ்டசேதா: ॥

பின்னர் திருவேங்கடமலையையடைந்து, அதன் அடிவாரத்தில் எம்பெருமானாராலே எழுந்தருளப்பண்ணப்பட்ட கோவிந்த3ராஜனையும், நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களையும் ஸேவித்து, திருமலை ஏறியருளி யதிராஜரான எம்பெருமானரோடு, திருவாழி திருச்சங்குகளை திருக்கைகளிலேந்திய அலர்மேல்மங்கையுறைமார்பனை அருள்மாறன், சேரலர்கோன், நற்கலியன் முதலான ஆழ்வார்கள் (திருவேங்கட முடையான் விஷயமாக) அருளிச்செய்த பாசுரங்களை அநுஸந்தி4த்துத் திருவடிதொழுது மனம்மகிழ்ந்தார். *(17)*

तत्र श्रीकार्यक्लृप्त्यै यतिपतियमिनं कल्पयित्वा निदेशेह्व
तस्मात्प्रस्थाय गत्वा रघुवरनिलयं किंगृहं निस्तुलेशम् ।
श्रीमन्तं भक्तिसारं दशरथतनयं पूर्णवर्यं च नत्वा
सूतं पार्थस्य नीरक्षितिधरतिलकं संयमीन्द्रं च भेजे ।। १८

தத்ர ஸ்ரீகார்யக்லுப்த்யை யதிபதியமிநம் கல்பயித்வா நிதே3ஶே
தஸ்மாத் ப்ரஸ்தா2ாய க3த்வா ரகு4வரநிலயம் கிம்க்3ருஹம் நிஸ்துலேஶம் ।
ஸ்ரீமந்தம் ப4க்திஸாரம் த3ஶரத2தநயம் பூர்ணவர்யம் ச நத்வா
ஸூதம் பார்த்த2ஸ்ய நீரக்ஷிதித4ரதிலகம் ஸம்யமீந்த்3ரம் ச பே4ஜே ॥ (18)

அங்கே (திருமலையில்) ஸ்ரீகார்யத்திற்காக இளங்கேள்வி எம்பெருமானர் ஜீயரை நியமித்து, அங்கு நின்றும் புறப்பட்டு திருவெவ்வுளூர் வீரராக4வனையும், திருநின்றவூர் நித்திலத்தொத்தையும், திருமழிசையில் ப4க்திஸாரரான திருமழிசைப்பிரானையும், பச்சைவாரணப்

பெருமாள்கோயிலில் த$_3$ாஶரதி$_2$யான முதலியாண்டானையும், பூவிருந்த வல்லியில் காஞ்சீபூர்ணரான திருக்கச்சிநம்பியையும், திருவல்லிக்கேணியில் பார்த்த$_2$ஸாரதி$_2$யையும், திருநீர்மலை எம்பெருமானையும், ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானுரையும் மங்க$_3$ளாஶாஸநம் செய்தருளினர். *(18)*

भूयो नत्वा करीशं तदनु स मधुरां तद्द्वयोत्पत्तिभूमिं
गत्वा स्तुत्वाऽभिरामं फणितिलकपुरे देवनाथं च नत्वा ।
वन्दित्वा सत्कवीन्द्रं कलिमथनमुनिं दिव्यदेशान् प्रणम्य
श्रीरङ्गं प्राप्य योगी चिरविरहरुजं स्फीतमोदो मुमोच ।। १९

பூ$_4$யோ நத்வா கரீஶம் தத$_3$நு ஸ மது$_4$ராம் தத்$_3$த்$_3$வயோத்பத்திபூ$_4$மிம்
க$_3$த்வா ஸ்துத்வாऽபி$_4$ராமம் ப$_2$ணிதிலகபுரே தே$_3$வநாத$_2$ம் ச நத்வா ।
வந்தி$_3$த்வா ஸத்கவீந்த்$_3$ரம் கலிமத$_2$நமுநிம் தி$_3$வ்யதே$_3$ஶாந் ப்ரணம்ய
ஸ்ரீரங்க$_3$ம் ப்ராப்ய யோகீ$_3$ சிரவிரஹருஜம் ஸ்பீ$_2$தமோதே$_3$ா முமோச ॥ *(19)*

மீண்டும் பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளி பேரருளாளனை ஸேவித்து, அங்கிருந்து த்$_3$வயம்விளைந்த திருப்பதியான மது$_4$ராந்தகத்திற்குச் சென்று சக்ரவர்த்தித்திருமகனைத் துதித்து, பின்னர் திருவஹீந்த்ரபுரத்துக்கு எழுந்தருளி தெய்வநாயகனை மங்க$_3$ளாஶாஸநம் செய்தருளி, நாலுகவிப்பெருமாளும் திருக்கலிகன்றியுமான திருமங்கையாழ்வாரை திருநக$_3$ரியில் ஸேவித்து, திருக்கண்ணபுரம், ராஜமன்னார்குடி, திருக்குடந்தை முதலான திருப்பதிகளையும் வணங்கி, திருவரங்கத்தை அடைந்து, பெரியபெருமாளை நெடுநாள் பிரிந்ததாலுண்டான வருத்தம் தீர்ந்து மகிழ்ந்தார். *(19)*

नत्वा श्रीरङ्गनाथं विविधमणिमुखैर्वस्तुभिस्तोषयित्वा
नित्यं तत्रैव तिष्ठन् स्वदिनचरितकृद्देवराजार्यजुष्टः ।
सार्वज्ञाद्वृद्धकेशं वरदहरिमसौ पावनार्थं निदेष्टा
दृष्टादृष्टैर्वधूलं वरदगुरुवरं सन्ततं संपुपोष ।। २०

நத்வா ஸ்ரீரங்க$_3$நாத$_2$ம் விவித$_4$மணிமுகை$_2$ர் வஸ்துபி$_4$ஸ் தோஷயித்வா
நித்யம் தத்ரைவ திஷ்ட$_2$ந் ஸ்வதி$_3$நசரிதக்ருத்$_3$தே$_3$வராஜார்யஜுஷ்டஃ ।
ஸார்வஜ்ஞாத்$_3$வ்ருத்$_3$த$_4$கேஶம் வரத$_3$ஹரிமஸௌ பாவநார்த்த$_2$ம் நிதே$_3$ஷ்டா
த்$_3$ருஷ்டாத்$_3$ருஷ்டைர்வதூ$_4$லம் வரத$_3$கு$_3$ருவரம் ஸந்ததம் ஸம்புபோஷ ॥(20)

பெரியபெருமாளை ஸேவித்து, தாம் கொண்டுவந்த பலவகைப்பட்ட திருவாப$_4$ரணங்கள், திருவெண்கொற்றக்குடைகள், திருவெண்சாமரங்கள், திருவாலவட்டங்கள் முதலான பொருட்களாலே உகப்பித்து, நித்யமாக அங்கேயே (திருவரங்கத்திலேயே) எழுந்தருளியிருக்கையில், தம்விஷய மான தி$_3$நசர்யை என்கிற ப்ரப$_3$ந்த$_4$த்தை அருளிச்செய்த எறும்பியப்பாவால் வந்தடையப்பட்டார்.

ஜீயர் எல்லாமறிந்தவராகையாலே, கைங்கர்யத்திற்காக வந்த வரம்தரும்பெருமாள்பிள்ளை தீக்ஷையோடிருப்பதைப்பார்த்து, ஶுத்$_3$த்$_4$யர்த்த$_2$மாக இன்றைக்கு திருமுடிவிளக்குவித்துக்கொள்ளும் என்று நியமித்தார். (அன்றையதினமே வரம்தரும்பெருமாள்பிள்ளைக்குக் குமாரர் பிறந்து பத்துநாளும் கடந்தது என்ற செய்திவர அனைவரும் ஜீயரின் எல்லாமுணர்ந்த தன்மையைக் கண்டு வியந்தனர்.)

கந்தாடையண்ணன் திருமாளிகையில் உபாத$_3$ான த்$_3$ரவ்யத்தைக் கொண்டு நடந்துவந்த அழகியசிங்கர் திருவாராத$_4$னத்திற்கு த்$_3$ரவ்யம் குறைந்து வருகிறபடியைக்கண்டு, தமக்கு வந்த திருமுன்காணிக்கை த்$_3$ரவ்யத்தை தினந்தோறும் அண்ணன் திருமாளிகைக்கு அனுப்பும்படி நியமித்து, இவ்வண்ணம் த்$_3$ருஷ்டாத்$_3$ருஷ்டங்களிரண்டிலும் அண்ணனை அநவரதம் ஆத$_3$ரித்துப்போந்தார். *(20)*

अर्चारूपां स्वमूर्तिं चरणसरसिजत्रायिणीमुत्तरीयं
स्वादर्शं श्वेतमृत्स्नां स्वयमथ वितरन् प्राहिणोद्देवराजम्।
वानाद्रौ योगिवर्यं विभुपरिचरणे स्थापयित्वा स्वशिष्यं
गोविन्दार्यं च गोदाप्रसदनमुखतो भट्टनाथं समाख्यत् ।। २१

அர்ச்சாரூபாம் ஸ்வமூர்த்திம் சரணஸரஸிஜத்ராயிணீமுத்தரீயம்
ஸ்வாத$_3$ர்ஶம் ஶ்வேதம்ருத்ஸ்நாம் ஸ்வயமத$_2$ விதரந் ப்ராஹிணோத்$_3$
தே$_3$வராஜம்।
வாநாத்$_3$ரௌ யோகி$_3$வர்யம் விபு$_4$பரிசரணே ஸ்த$_2$ாபயித்வா ஸ்வஶிஷ்யம்
கோ$_3$விந்தா$_3$ர்யம் ச கோ$_3$தா$_3$ப்ரஸத$_3$நமுக$_2$தோ ப$_4$ட்டநாத$_2$ம் ஸமாக்$_2$யத் ।। *(21)*

பிறகு, ஜீயர் தம்முடைய அர்ச்சாவிக்$_3$ரஹத்தையும், திருவடித் தாமரைகளைப் பாதுகாக்கும் திருவடிநிலைகளையும், திருப்பரியட்டத்தையும், திருக்கண்ணாடியையும், திருமண்காப்பு ஶேஷத்தையும் தந்து எறும்பியப் பாவை அவருடைய ஊருக்கு அனுப்பியருளினார். அழகியவரத$_3$ரான ராமாநுஜஜீயரை வானமாமலையில் தெய்வநாயகப்பெருமாள் ஸ்ரீகார்யத் திற்காக நியமித்தார். திருவாடிப்பூரத்திலே ஆண்டாளுடைய தீர்த்தப்ராஸா த$_3$ங்களை ஆத$_3$ரத்தோடு கொணர்ந்து ஸமர்ப்பித்த கோவித்$_3$ாஸரப்பருக்கு ப$_4$ட்டர்பிரான்த$_3$ாஸர் என்று திருநாமஞ்சாத்தியருளினார்.*(21)*

द्रष्टुं भूयश्शठारिं सपदि जिगमिषन् माधुरं बाणराजं
तापाद्यैः पावयित्वा तदुचितशिबिकाधारणाद्यर्च्यमानः।
तद्दत्तग्रामवर्यं रुचिरवरइति ख्यापयित्वा मुनीन्द्रः
सेतोमर्गिण गच्छन्नकुरुत मनसा तिन्त्रिणीवृक्षमोक्षम् ।। २२.

த்3ரஷ்டும் பூயஶ்ஶட2ாரிம் ஸபதி3 ஜிக3மிஷந் மாது4ரம் ப3ாணராஜம்
தாபாத்3யைஃ பாவயித்வா தது3சிதஶிபி3காத4ாரணாத்3யர்ச்யமாநஃ ।
தத்3த3த்தக்3ராமவர்யம் ருசிரவரஇதி க்2யாபயித்வா முநீந்த்3ரஃ
ஸேதோர்மார்கே3ண க3ச்சந்நகுருத மநஸா திந்த்ரிணீவ்ருக்ஷமோக்ஷம் ।। 22

மீண்டும் நம்மாழ்வாரை ஸேவிக்க விரும்பி, விரைந்து புறப்பட்ட ஜீயர், வழியில் மதுரைஅரசனை மஹாபலிவாணராயனுக்கு பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்தருளி, அவனாலே பல்லக்குச்சுமத்தலாகிற கைங்கர்யத்திறல் கௌ3ரவிக்கப்பட்டார். அவன் கொடுத்த முத்தரசனந்தல் என்ற க்3ராமத்தை அழகியமணவாளநல்லூர் என்ற பெயரிட்டார். திருவணைவழியாகச் செல்லும்போது தமக்கும் முதலிகளுக்கும் நிழல்கொடுத்த பெரியபுளியமரம் மோக்ஷமடையவேண்டும்மென்று மனத்தாலே நினைத்தார். அவ்வளவிலே அம்மரம் பட்டுப்போய் பரமபதத்தை ப்ராபித்தது. (22)

दृष्ट्वा श्रीमच्छठारिं पुनरपि कुतुकी पूर्ववद्रङ्गधाम्नि
श्रीशं नत्वा वनाद्रौ यतिवरयमिनं प्राहिणोत्किंक्रियार्थे।
श्रीमद्रामानुजाङ्घ्र्योरमृतगुरुवरैरर्पितां सूक्तिमालां घ्र्यो
व्याचक्षाणो महार्घैः सरसघृतमुखै रङ्गनाथं पुपोष ।। २३

த்3ருஷ்ட்வா ஶ்ரீமச்ச2ட2ாரிம் புநரபி குதுகீ பூர்வவத்3ரங்க3த4ாம்நி
ஶ்ரீஶம் நத்வா வநாத்3ரௌ யதிவரயமிநம் ப்ராஹிணோத் கிங்க்ரியார்த்தே2।
ஶ்ரீமத்3ராமாநுஜாங்க்4ர்யோரம்ருதகு3ருவரைரர்ப்பிதாம் ஸூக்திமாலாம்
வ்யாசக்ஷாணோ மஹார்கை4ஃ ஸரஸக்4ருதமுகை2 ரங்க3நாத2ம் புபோஷ ।। (23)

நம்மாழ்வாரை மங்க3ளாஶாஸநம் செய்துவிட்டு, மீளவும் குதூஹலத்தோடு கோயிலுக்கெழுந்தருளிப் பெரியபெருமாளைப் பணிந்து நின்றார். திருமாலிருஞ்சோலைமலையில் ஸ்ரீகார்யநிர்வாஹகராகவிருந்து கைங்கர்யம் பண்ண யதிராஜஜீயரை அனுப்பிவைத்தார். எம்பெருமானாரின் திருவடித்தாமரைகளில் திருவரங்கத்தமுதனாரால் ஸமர்ப்பிக்கப்பட்ட சொன்மாலையான இராமாநுசநூற்றந்தாதிக்கு வ்யாக்2யாநம் அருளிச்செய்தார். நறுநெய், பச்சைகற்பூரம் முதலிய சிறந்த பதா3ர்த்த2ங்களாலே நம்பெருமாளை உபசரித்து உகப்பித்தார். (23)

श्रीमान् कान्तोपयन्ता शठरिपुफणितिव्याक्रियाया: सहस्रै:
षड्भिस्त्रिंशत्सहस्र्या उपचयकृदिति श्रीशभट्टार्यगीत:।
आख्यातां कृष्णपादै: कलिकलुषबलात् कर्शितां पूर्वटीकां
दृष्ट्वा भट्टेशसूक्तेर्ललितरसमयीं व्याक्रियां साधु चक्रे ।। २४

ஸ்ரீமாந் காந்தோபயந்தா ஶட$_2$ரிபுப$_2$ணிதிவ்யாக்ரியாயாঃ ஸஹஸ்ரைঃ
ஷட்$_3$பி$_4$ஸ்த்ரிம்ஷத்ஸஹஸ்ர்யா உபசயக்ருதி$_3$தி ஸ்ரீஶப$_4$ட்டார்யகீ$_3$தঃ
ஆக்$_2$யாதாம் க்ருஷ்ணபாதை$_3$ঃ கலிகலுஷப$_3$லாத் கர்ஶிதாம் பூர்வடீகாம்
த்$_3$ருஷ்ட்வா ப$_4$ட்டேஶஸூக்தேர்லலிதரஸமயீம் வ்யாக்ரியாம்
ஸாது$_4$ சக்ரே (24)

கைங்கர்யச்செல்வம் நிறைந்தவரான மணவாளமாமுனிகள் திருவாய்மொழி வ்யாக்$_2$யானமான ஈடுமுப்பத்தாறுயிரப்பெருக்கர் என்று திருமாலைதந்தபெருமாள் என்கிற ப$_4$ட்டராலே கொண்டாடப்பட்டார். க்ருஷ்ணஸூரியான பெரியவாச்சான்பிள்ளையால் அருளிச்செய்யப்பட்ட பெரியாழ்வார்திருமொழி வ்யாக்$_2$யாநத்தின் முன்(பெரும்)பகுதி கலியின் கொடுமையினால் காணமற்போக, அப்பகுதிக்கு ரஸமயமான ஒரு வ்யாக்$_2$யாநத்தை நன்றாக அருளிச்செய்தார் ஜீயர். (24)

बालं वाधूलनाथं स्वकृतविवरणश्लाघिनं वर्धयित्वा
बाणार्ये तत्सहाये भुवनगुरुनतं रङ्गनाथं ददौ स: ।
आम्नायानां विमर्शी गुरुवरहृदयं स्थाविरे व्याचिकीर्षन्
युष्मद्वंश्यार्थमेतत्त्विति वरदगुरुं प्राह तेनानुयुक्त: ।। २५

ப$_3$ாலம் வாதூ$_4$லநாத$_2$ம் ஸ்வக்ருதவிவரணஶ்லாகி$_4$நம் வர்த$_4$யித்வா
ப$_3$ாணார்யே தத்ஸஹாயே பு$_4$வநகு$_3$ருநதம் ரங்க$_3$நாத$_2$ம் த$_3$தௌ$_3$ ஸঃ ।
ஆம்நாயாநாம் விமர்ஶீ கு$_3$ருவரஹ்ருத$_3$யம் ஸ்த$_2$ாவிரே வ்யாசிகீர்ஷந்
யுஷ்மத்$_3$வம்ஶ்யார்த்த$_2$மேதத்த்விதி வரத$_3$கு$_3$ரும் ப்ராஹ தேநாநுயுக்தঃ ।। (25)

தம்முடைய வ்யாக்$_2$யாநத்தைக் கொண்டாடின அதிப$_3$ாலரான கந்தாடைநாயனை ஆஶீர்வதித்து, பெரியாழ்வார்திருமொழி வ்யாக்$_2$யாநம் எழுதும்போது உடனிருந்து உதவிய திருப்பாணாழ்வார்தாதர்நாயனாருக்கு பிள்ளைலோகாசார்யரின் திருவாராத$_4$னப்பெருமாளான ஸ்ரீரங்க$_3$ராஜரைக் கொடுத்தருளினார்.

ஜீயர் முதுமையில் திருக்கழுத்துநோவ ஆசார்யஹ்ருத$_3$ய வ்யாக்$_2$யானமெழுதுகையில், ‘எதற்காக இப்படி ஶ்ரமப்படவேண்டும்’ என்று கேட்ட கோயில் கந்தாடையண்ணனுக்கு ‘உம்முடைய வம்ஶத்தினருக்காகவே’ என்று பதிலுரைத்தார்.(25)

हृद्यं वाधूलधुर्यं वरदगुरुवरं वादिभीकृद्गुरुं च
श्रीभाष्यश्रीशठारिश्रुतिविवरणयोः कल्पयित्वाऽभिषिक्तौ ।
देवस्यादेशमेवं जगति सफलयन् स्वावतारेण भूयः
प्राप्तुं स्वं धाम दिव्यं रुचिरवरमुनिश्चेतनायां चकाङ्क्षे ।। २६

ஹ்ருத்$_3$யம் வாதூ$_4$லது$_4$ர்யம் வரத$_3$கு$_3$ருவரம் வாதி$_3$பீ$_4$க்ருத்$_3$கு$_3$ரும் ச
ஶ்ரீப$_4$ாஷ்யஶ்ரீஶட$_2$ாரிஶ்ருதிவிவரணயோஃ கல்பயித்வாऽபி$_4$ஷிக்தௌ ।
தே$_3$வஸ்யாதே$_3$ஶமேவம் ஜக$_3$தி ஸப$_2$லயந் ஸ்வாவதாரேண பூ$_4$யஃ
ப்ராப்தும் ஸ்வம் த$_4$ாம தி$_3$வ்யம் ருசிரவரமுநிஶ்சேதநாயாம் சகாங்க்ஷே ॥ (26)

ஜீயர் தம் மனத்துக்கு இனியவர்களான கந்தாடையண்ணனையும், ப்ரதிவாதி$_3$ப$_4$யங்கரம் அண்ணனையும் முறையே ப$_4$க$_3$வத்$_3$விஷய, ஸ்ரீப$_4$ாஷ்ய ஸிம்ஹாஸநங்களில் அபி$_4$ஷேகம் செய்தருளினார். இவ்வண்ணம் எம்பெருமானுடைய நியமனத்தை தம்முடைய அவதாரத்தாலே நிறைவேற்றி, மணவாளமாமுனிகள் மீண்டும் தம்முடைய தி$_3$வ்யமான ஸ்த$_2$ாநத்தை அடைய மநஸ்ஸாலே நினைத்தார். (26)

आर्तिं स्वोक्त्या विवृण्वन् रुचिरवरमुनिः स्यन्दनस्थं रमेशं
श्रीरङ्गेशं दिदृक्षुः स्वमठधुरि समागत्य तिष्ठन्तमेव।
दृष्ट्वा धूताखिलार्तिः कतिपयदिवसान् लोकभाग्येन जीवन्
भूयो रामानुजाङ्घ्रिद्वयसमुपगमे दुर्निवारत्वरोऽभूत् ।। २७

ஆர்த்திம் ஸ்வோக்த்யா விவ்ருண்வந் ருசிரவரமுநிஃ ஸ்யந்த$_3$நஸ்த$_2$ம் ரமேஶம்
ஶ்ரீரங்கே$_3$ஶம் தி$_3$த்$_3$ருக்ஷுஃ ஸ்வமட$_2$து$_4$ரி ஸமாக$_3$த்ய திஷ்ட$_2$ந்தமேவ ।
த்$_3$ருஷ்ட்வா தூ$_4$தாகி$_2$லாத்திஃ கதிபயதி$_3$வஸாந் லோகப$_4$ாக்யேந ஜீவந்
பூ$_4$யோ ராமாநுஜாங்க்$_4$ரித்$_3$வயஸமுபக$_3$மே து$_3$ர்நிவாரத்வரோऽபூ$_4$த் ॥ (27)

எம்பெருமானை உடனே அடையவேண்டும் என்ற தம்முடைய திருவுள்ளத்துடிப்பை 'ஆர்த்திப்ரபந்தம்' மூலம் வெளிப்படுத்திய ஜீயர், திருத்தேரிலே புறப்பட்டு திருமகள்கொழுநனுகிய நம்பெருமாள் மட$_2$த்து வாசலிலே நின்று ஸேவை ஸாதிக்கக் கண்டு து$_3$க்கமெல்லாம் தீர்ந்தவராய், உலகத்தார் செய்த பாக்$_3$யத்தால் ஒருசிலநாட்கள் எழுந்தருளியிருந்து, மீண்டும் எம்பெருமானாரின் திருவடியிணையை அடைவதில் மிகுந்த த்வரையையுடையரானார். (27)

तस्मिन् काले क्षितीशं कमपि यदुगिरेः सुन्दरं भट्टनाथ-
द्वाराऽरक्षत्स्वपौत्रे निजतनुकृतये भाजनं स्वं दिदेश ।
स्थित्वा रामानुजाङ्घ्र्याश्रित इह शरदां सप्तर्ति त्र्यब्दपूर्वां
सोऽयं रामानुजाङ्घ्रिद्वयमथ रुधिरोद्गारिकुम्भे प्रपेदे ।। २८

தஸ்மிந் காலே க்ஷிதீஶம் கமபி யதுகி₃ரேः ஸுந்த₃ரம் ப₄ட்டநாத₂-
த்₃வாராऽரக்ஷத் ஸ்வபௌத்ரே நிஜதநுக்ருதயே பா₄ஜநம் ஸ்வம் தி₃தே₃ஶ ।
ஸ்தி₂த்வா ராமாநுஜாங்க்₄ர்யாஶ்ரித இஹ ஶரதா₃ம் ஸப்ததிம் த்ரயப்₃த₃ பூர்வாம்
ஸோऽயம் ராமாநுஜாங்க்₄ரித்₃வயமத₂ ருதி₄ரோத்₃கா₃ரி கும்பே₄ ப்ரபேதே₃ ॥ (28)

அக்காலத்தில் வந்தடைந்த அண்ணராய சக்ரவர்த்திக்கும், மேல்நாட்டுத் தோழப்பருக்கும், அவர் தமையனூரான அழகியமணவாளப் பெருமாள்நாயனாருக்கும் பரவஸ்துப₄ட்டர்பிரான் ஜீயரைக்கொண்டு பஞ்சஸம்ஸ்காரங்கள் செய்வித்தருளினூர். பின்பு தம்முடைய பூர்வாஶ்ரம திருப்பேரனாரிடத்தில் தமது அர்ச்சாவிக்₃ரஹத்தை எழுந்தருளப் பண்ணுவதற்காகத் தம்முடைய திருக்கைச்செம்பைக் கொடுத்தருளினார். எம்பெருமானார் திருவடிகளில் ஊன்றியவராய் எழுபத்துமூன்று திருநக்ஷத்ரங்கள் இந்நிலவுலகில் எழுந்தருளியிருந்த ஜீயர் ருதி₄ரோத்₃கா₃ரி ஸம்வத்ஸரத்தில் எம்பெருமானார் திருவடிகளை அடைந்தார்.*(28)*

साहस्राणां चतुष्कादनुकलिशरदोऽर्वाक् चतुर्भ्यः शतेभ्यः
सप्तत्यूर्ध्वं द्वितीये सतुलसितगरुद्युक्तसाधारणाब्दे ।
मूले क्लृप्तावतारो घन इव सजलः सर्वसन्तापहारी
श्रीमान् कान्तोपयन्ता मुनिरिह जयतादाविरञ्चप्रपञ्चम् ।।२९

ஸாஹஸ்ராணாம் சதுஷ்காத₃நுகலிஶரதோ₃ऽர்வாக் சதுர்ப்₄யः ஶதேப்₄யः
ஸப்தத்யூர்த்₄வம் த்₃விதீயே ஸதுலஸிதக₃ருத்₃யுக்தஸாத₄ாரணாப்₃தே₃ ।
மூலே க்லுப்தாவதாரோ க₄ந இவ ஸஜலः ஸர்வஸந்தாபஹாரீ
ஶ்ரீமாந் காந்தோபயந்தா முநிரிஹ ஜயதாதா₃விரிஞ்ச ப்ரபஞ்சம் ॥ (29)

கலியுக₃ம் பிறந்து நாலாயிரத்து நானூற்று எழுபத்துயிரண்டாவதான ஸாத₄ாரண வருஷத்தில் துலா (ஐப்பசி)மாதத்தில், வளர்பிறையில் திருமூலநன்னாளில் திருவவதரித்து, நீருண்டகாளமேக₄ம் போலே அனைவருடைய தாபத்தையும் போக்கிக் கொண்டெழுந்தருளியிருந்த கைங்கர்யச்செல்வரான பெரியஜீயர் உலகம் உள்ளவரையில் இங்கே வெற்றியோடு விளங்கட்டும்.*(29)*

व्रत्याकृत्याऽथ रङ्गप्रभुमणिवचसा किञ्च वद्धागिरा च
स्वावासे वह्निजुष्टे फणिपतिवपुषा नालतो निर्गमेन ।
श्रीमान् शेषावतारो वरवरमुनिरित्येव सर्वोऽपि लोकः
यं मेने तं गुणाढ्यं रुचिरवरमुनिं प्रोच्य धन्यो मदात्मा ।। ३०

வ்ரத்யாக்ருத்யாऽத$_2$ ரங்க$_3$ப்ரபு$_4$மணிவசஸா கிஞ்ச வ்ருத்$_4$த$_3$ாகி$_3$ரா ச
ஸ்வாவாஸே வஹ்நிஜுஷ்டே ப$_2$ணிபதிவபுஷா நாலதோ நிர்க$_3$மேந ।
ஸ்ரீமாந் ஶேஷாவதாரோ வரவரமுநிரித்யேவ ஸர்வோऽபி லோக:
யம் மேநே தம் கு$_3$ணாட்$_4$யம் ருசிரவரமுநிம் ப்ரோச்ய த$_4$ந்யோ மத$_3$ாத்மா ॥(30)

பாலின்வண்ணம் போன்ற திருமேனி நிறத்தாலும், உத்தமநம்பிக்குக் கனவிலே தோன்றிய பெரியபெருமாள் 'இவர்காணும் மாமுனிகளாக அவதரித்துள்ளார்' என்று திருவநந்தாழ்வானைத் தொட்டுக்காட்டி அருளிச்செய்கையாலும், திருமலையாழ்வார் காலக்ஷேப கூடத்திலே ஶடகோபக்கொற்றி என்கிற மூதாட்டி பெரியஜீயரை ஆதிஶேஷனுருவில் கண்டதாலும், ஆழ்வார்திருநக$_3$ரியில் ஜீயர் எழுந்தருளியிருந்த மட$_2$த்திற்கு சிலர் நெருப்பு வைத்தபோது பாம்புருக்கொண்டு கோமுகச்சாரிகைவழியாக வெளியில் வந்தபடியாலும், கைங்கர்யச்செல்வம் நிறைந்த ஆதி$_3$ஶேஷனின் அவதாரபூ$_4$தரே மணவாளமாமுனிகள் என்று எல்லா உலகத்தாராலும் கருதப்படும் கு$_3$ணக்கடலான பெரியஜீயரைப் பற்றிப் பேசி அடியேன் த$_4$ந்யனானேன்.(30)

इत्थं भूसारवासान्नृहरिगुरुवरद्दाशरथ्यार्यवंश्यात्
जातस्तद्दृष्टिपूतो वरदगुरुकृपालब्धबोधप्रबुद्धः ।
सत्सेवी राघवार्यो रुचिरवरमुनेःसर्वलोकेडिताङ्घ्रेः
व्याजह्ने दिव्यचर्यारसचषकमिदं यः पठेत् सोऽतिधन्यः ।। ३१

இத்த$_2$ம் பூஸாரவாஸாந்ந்ருஹரிகு$_3$ருவராத்$_3$த$_3$ாஶரத்$_2$யார்யவம்ஶ்யாத்
ஜாதஸ்தத்$_3$த்$_3$ருஷ்டிபூதோ வரதகு$_3$ருக்ருபாலப்$_3$த$_4$பே$_3$ாத$_4$ப்ரபு$_3$த்$_3$த$_4$: ।
ஸத்ஸேவீ ராக$_4$வார்யோ ருசிரவரமுநே: ஸர்வலோகேடி$_3$தாங்க்$_4$ரே:
வ்யாஜஹ்ரே தி$_3$வ்யசர்யாரஸசஷகமித$_3$ம் ய: படே$_2$த் ஸோऽதித$_4$ந்ய: ॥ (31)

வரவரமுநிஸுசரிதசஷகம் ஸம்பூர்ணம்.

இவ்வண்ணம் மஹீஸாரக்ஷேத்ரமான திருமழிசையில் வஸிக்கும் முதலியாண்டான் திருவம்ஶ்யரான நரஸிம்ஹாசார்யருக்கு புத்ரனாகப் பிறந்து அவரால் கடாக்ஷிக்கப்பட்டவரும், வரத$_3$ாசார்யருடைய அருளாலே பெற்ற அறிவினால் விளங்குபவரும் நல்லோர்களைப் பணிபவருமான வீரராக$_4$வார்யர் அனைத்துலகினராலும் வணங்கப்படும் திருவடிகளை உடையரான மணவாளமாமுனிகளின் தி$_3$வ்யசரித்ரரஸாம்ருதத்தை இ●வ்வாறு அருளிச்செய்தார். இந்நூலினைப் படிப்பவர் த$_4$ந்யராவார்.

****